**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP No.243/2024**

எ.ம.சா.1 தேதி.27.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | G.சந்தியா | க /பெ, | கமல்ராஜ் |
| வயது | 35 | தொழில் | யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட். |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை, |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு **முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ஆம் எதிர்மனுதாரர் தரப்பு 1ம்சாட்சி ஆவேன். நான் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட TN48 AC 6647 வாகனத்தில் 13 இருக்கைகள் மட்டுமே உள்ளன. மேலும், 13 பயணிகள் மட்டுமே அமர்ந்து செல்வதற்கு வசதி உண்டு. மேற்படி விபரம் மேற்படி வாகனத்தின் பதிவுச்சான்று (மசாஆ2) மற்றும் காப்பீட்டு பாலிசி (மசாஆ3) ஆகிய இரு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தின் போது மேற்படி வாகனத்தில் மனுதாரர் உட்பட 24 நபர்கள் பயணம் செய்துள்ளார்கள். எனவே மேற்படி விபத்திற்கு மனுதாரர் மற்றும் 24 பயணிகள் தான் பொறுப்பாவார்கள். அதனால் மேற்படி வழக்கினை தள்ளுபடி செய்ய பிராத்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

மேற்படி வழக்கில் TN 48 AC 6647 என்ற வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 48 AC 6647 என்ற வாகனம் பயணாளிகளுக்கு சந்தா செலுத்தப்பட்டுள்ளது என்றால் அனுமதிக்கப்பட்டுள்ள 13 நபர்களுக்க மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.